# சைவ சித்தாந்தம் கூறும் சத்காரியவாதம்

**திருச்செல்வம் கிஷாந்தினி,**

உதவி விரிவுரையாளர்,

இந்து நாகரிகத்துறை,

இந்துக் கற்கைகள் பீடம்.

## ஆய்வுச்சுருக்கம்

இந்திய மெய்யியலின் எல்லாக் கிளைகளிலுமே காரண காரியத் தொடர்பு ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. மெய்யியலாளர்கள் காரணத்துவத்தை ஆய்வுகளுக்கான ஒரு பிரதான தலையங்கமாக ஏற்றுக் கொள்கிறார்கள். இந்திய மெய்யியல் முறைமை ஒவ்வொன்றினதும் யதார்த்தம் பற்றிய கருத்தியல், காரண காரியத் தொடர்பு கோட்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. காரணக் கொள்கை தொடர்பான மெய்யியலாய்வுகளில் எழுகின்ற அடிப்படையான மூலப்பிரச்சினைகளில் காரியம் காரணத்தில் ஏலவே உள்ளுறைந்துள்ளதா? அல்லவா? என்ற பிரச்சினையே முதன்மையானது. இந்து மெய்யியல் முறைமைகளிடையே காரண காரியத் தொடர்புகள் சம்பந்தப்பட்ட மூன்று பிரதான கோட்பாடுகள் நிலவுகின்றன. அவையாவன சுபாவ வாதம், சத்காரிய வாதம், அசத்காரிய சாதம் எனும் மூன்றுமாகும். சத்காரிய வாதம் பரிணாமவாதம், விவர்த்த வாதம் எனவும், அசத்காரிய வாதம் ஆரம்ப வாதம், பிரதீத்யசமுத்பாத வாதம் எனவும் இரு வகைப்படுகின்றன. இக்கோட்பாடுகளுள் சைவ சித்தாந்தம் சத்காரியவாதம் என்ற காரண காரியக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் தத்துவமாகும். காரியமென்பது காரணத்தில் உள்ளடங்காத புதியதொன்றல்ல. சடமாகிய காரணத்தில் ஏலவே உள்ளடங்கியிருந்ததே காரியமாக வெளிப்படுகிறது என்பது சித்தாந்திகளின் துணிபு. இதனடிப்படையில் இந்திய மெய்யியல் வளர்ச்சிக்கு காரண காரிய நிலைப்பாடு எத்தகைய முக்கியத்துவம் உடையது என்பதற்கு சைவத்தின் முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் சைவ சித்தாந்தத்தில் சத்காரியவாதம் பற்றி நோக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்** : சைவ சித்தாந்தம், இந்திய மெய்யியல், சத்காரியவாதம், காரண – காரிய வாதம்,

## அறிமுகம்

இந்திய மெய்யியலின் எல்லாக் கிளைகளிலுமே காரண காரியத் தொடர்பு ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. மெய்யியலாளர்கள் காரணத்துவத்தை ஆய்வுகளுக்கான ஒரு பிரதான தலையங்கமாக ஏற்றுக் கொள்கிறார்கள். இந்திய மெய்யியல் முறைமை ஒவ்வொன்றினதும் யதார்த்தம் பற்றிய கருத்தியல், காரண காரியத் தொடர்பு கோட்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. Mahesh Chandra Bharatiya கூறுகின்றபடி காரணத்தின் முக்கியத்துவம் இருவகையானதாக அமைகிறது. ஒன்று பௌதிக அதீதவியல் அடிப்படையிலானது. மற்றது இயல்பியல் அடிப்படையிலானது. யதார்த்தம் என்ற கருத்தியலோடு தொடர்புபட்டு இருப்பதாலேயே அது பௌதிக அதீதவியல் அடிப்படையில் முக்கியத்துவம் பெறுகிறது. ஒரு பொருள் மற்றொன்றாக மாற்றமடைகிறது. இந்த மாற்றமானது ஒரு விழிப்பான சக்தியின் செயற்பாட்டினாலேயே ஏற்படுகிறது.

ஆரம்பத்தில் காட்சிப்பொருள் உண்மையை நிரூபிக்கும் தொடக்க நிலையிலேயே காரண காரிய வாதத்தின் முகிழ்ப்பு நிகழ்கிறது. முதலில் பிரபஞ்சம் பற்றிய அதன் உண்மைத்துவம், இன்மைத்துவ நிலைப்பாட்டில் காரண காரிய முறையில் பொருள் முடிவுகளாக வழங்கிய தத்துவ மரபுகளாக இந்து மெய்யியல் சிந்தனை மரபுகள் விளங்குகின்றன. இந்தப் புறப்பொருட்காட்சி உண்மைத்துவம் பற்றிய தொடர்பை அடிப்படையாகக் கொண்டே தத்துவத்தின் ஏனைய உட்பொருளின் உண்மைத்துவம், இன்மைத்துவம், தோற்றப்பாடு பற்றிய இந்து தத்துவப் புலத்திலும் காரண காரியவாதம் செல்வாக்குப் பெறுகிறது.

காரணக் கொள்கை தொடர்பான மெய்யியலாய்வுகளில் எழுகின்ற அடிப்படையான மூலப்பிரச்சினைகளில் காரியம் காரணத்தில் ஏலவே உள்ளுறைந்துள்ளதா? அல்லவா? என்ற பிரச்சினையே முதன்மையானது. இந்து மெய்யியல் முறைமைகளிடையே காரண காரியத் தொடர்புகள் சம்பந்தப்பட்ட மூன்று பிரதான கோட்பாடுகள் நிலவுகின்றன. அவையாவன சுபாவ வாதம், சத்காரிய வாதம், அசத்காரிய சாதம் எனும் மூன்றுமாகும். சத்காரிய வாதம் பரிணாமவாதம், விவர்த்த வாதம் எனவும், அசத்காரிய வாதம் ஆரம்ப வாதம், பிரதீத்யசமுத்பாத வாதம் எனவும் இரு வகைப்படுகின்றன. இக்கோட்பாடுகளுள் சைவ சித்தாந்தம் காரியம் காரணத்தில் ஏலவே உள்ளடங்கி உள்ளது. 'உள்ளது இலதாகாது' என்ற அடிப்படையில் சத்காரிய வாதத்தை ஏற்றுக் கொள்கிறது.

**சைவ சித்தாந்தத்தின் சத்காரிய வாத அடிப்படைகள்**

உலகின் தோற்ற ஒடுக்கத்திற்கு நிமித்த காரணனாய் பரம்பொருள் எடுத்தாளப்படுகின்ற வேளை சைவ சித்தாந்தம் காரண காரிய தத்துவத்திற்கு முதன்மை அளிப்பது காணலாம். ஒவ்வொரு விளைவும் ஏதோவொரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றது. உலக தோற்ற ஒடுக்கங்களுக்கும், உலக காரியங்களுக்கும் ஒரு காரணன் இருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது. இல்பொருளிலிருந்து எப்பொருளும் எழுதல் சாத்தியமாகாது. உள்பொருளே காரணமாதல் வேண்டும் எனச் சித்தாந்தம் வலியுறுத்தி நிற்கிறது. இவ்வகையில் சைவ சித்தாந்தம் விளக்கும் காரண காரிய தத்துவமானது சத்காரியவாதம் எனப்படுகிறது. 'உள்ளதே தோன்றும் இல்லது வாராது' எனும் அடிப்படையைச் சத்காரியவாதம் எடுத்தாள்கிறது. இவ்வகையில் உலகப் படைப்பு என்பது புதிதாக ஒன்றைப் படைப்பது என்பதல்ல. படைத்தல், அழித்தல் என்பது சங்கற்ப மாத்திரையில் நிமித்த காரணனான இறைவன் அவ்வியக்க நிலையிலிருந்ததைத் தோற்றிப் பின் ஒடுக்குவான் என விளக்கமுறுவதாகின்றது. இறைவன் உலகினைப் படைக்கும் போது மாயையை முதற்காரணமாகவும், சிவசக்தி துணைக்காரணமாகவும், முதல்வன் நிமித்த காரணமாகவும் அமைகின்றன. பானையைக் கொண்டு, அதனைப் படைத்த குயவன் ஒருவன் உளன் என அறிவதுபோல உலகுவழி முதல்வனின் இருப்பு ஆதாரப்படுத்தப்படுகிறது. இவ்வகையில் சத்காரியவாதமானது சைவசித்தாந்தத்தில் எடுத்தாளப்படுகிறது.

காரியமாக இருக்கும் உலகம் இல்லாததாக இருந்து விளைந்து கொண்டிருப்பது. பொருள்களின் கூட்டினால் தோன்றி, தொடர்ந்து ஒன்று ஒன்றின் சார்பில் புதியதாகத் தோன்றுகிறது என்பதைச் சைவ சித்தாந்தம் மறுக்கிறது. முயலுக்கு வராதது கொம்பு – அத்தன்மை இல்லாததால் முயலுக்கு கொம்பு வரவில்லை என்பர். அதுபோல இல்லாதது வராது என்பது ஒரு விளக்கம். உள்ளது தான் வரும் என்றால் உள்ளது 'தானே' எப்படி வரும் என விவாதப்படுத்தி சத்காரிய வாதத்தை விரிவாக்குகிறது.

உலகமானது காரியமாகத் தோற்றப்படுவதற்கு முன்பாக காரணத்தில் இருந்தது என்பதைச் சைவ சித்தாந்தம் ஒடுக்கப்பட்டிருந்தது என்கிறது. "தோற்றிய திதியே ஒடுங்கிய மலத்துளதாம்" என்பதாக மெய்கண்டார் குறிப்பிடுகிறார்.

மண்ணைத் தோண்டி நீரை வெளிப்படுத்தும் காரியம் களிமண்ணிலிருந்து குடத்தை உண்டாக்கும் காரியம் இரண்டின் செயலுக்கும் 'உள்ளதே தோன்றும்' நிலையில் சத்காரிய வாதத்தை சைவ சித்தாந்தம் ஏற்றுக் கொண்டுள்ளது.

'மண் முதலிய காரணங்களினின்றும் குடம் முதலிய காரியங்கள் தோன்றுவதற்கு முன்னேயும் அவை தம் தம் காரியங்களில் உள்ளன என்பதற்குப் பிரமாணம் யாதும் இல்லை என்பது ஆராயாமல் கூறும் கூற்றேயாகும். எவ்வாறெனில் குடம் 'மண், பொன் வகை' என்பவற்றில் இருந்தல்லது பிறவற்றிலிருந்து தோன்றவும், ஆடை 'நூல், பட்டு, மரநார், சில உயிரினங்களின் உரோமம்' என்பவற்றில் இருந்தல்லது பிறவற்றிலிருந்து தோன்றவும் கண்டிலம். அதற்குக் காரணம் யாது? 'எந்த எந்தக் காரியங்கள் எந்த எந்தக் காரணத்தில் உள்ளனவோ அந்த அந்தக் காரணத்தில் நின்றல்லது பிறவற்றிலிருந்து தோன்றாது' எனும் நியதியே அதற்குக் காரணம். அந்நியதி இல்லாவிடில், எந்தக் காரியப் பொருளும் எந்தக் காரணப் பொருளினின்றும் தோன்றலாம் என்றாகிவிடும். அவ்வாறு தோன்றாமையால் எந்தக் காரியம் எந்தக் காரணத்தில் உள்ளதோ, அந்தக் காரியம் அந்தக் காரணத்தினின்றே தோன்றும். வேறு காரணத்தினின்று தோன்றாது'1 என்ற மேற்கோள் உரையானது உள்ளது தான் தோன்றும் இல்லாதது தோன்றாது என்பதைத் தெளிவுறுத்துகிறது. இவற்றை உணர்ந்தவாறு

"காரணம் காரியம் என்ற இரண்டிற்கும் ஓர் ஒற்றுமை எவ்விடத்தும் உள்ளதாய் இருக்கும். ஒரு காரணத்தினின்றும் அதனோடு சிறிதும் ஒற்றுமையின்றி முற்றிலும் வேறுபட்ட காரியம் தோன்றாது. அதாவது மண்ணிலிருந்து குடம் தோன்றுமன்றி ஆடை தோன்றாது. நூலினின்று ஆடை தோன்றுமன்றிக் குடம் தோன்றாது"2 எனத் தொகுத்துரைத்தனர்.

சத்காரிய வாதமானது பொருள் மாற்ற நிலையிலும் உறுதியாவதைப் பின்வருமாறு விளக்குவர்.

"சத்காரிய வாதத்தில்,'பொருள்கள் தோன்றுதல்' என்பது இயல்பாகவே நுட்ப நிலையில் புலனாகாதிருந்தவை பின்பு பருநிலையை அடைந்து புலனாதலே என்பது விளங்குதலால் பொருள்கள் அழிதல் என்பதும், பரு நிலையில் புலனாகி நின்றவை. அந்நிலையின் நீங்கி நுண்ணிலையை அடைந்து முன்போலாய் புலனாகாது போதலே என்பதும் விளங்கும். அதனால் இல்லது வாராது உள்ளது போகாது என்பதே சத்காரிய வாதமாகும்.

புலனாகின்ற நுண்ணிலையே 'காரண நிலை' என்றும், புலனாகின்ற பருநிலையே 'காரிய நிலை' என்றும் சொல்லப்படுகின்றன."3

## காரணத்தில் காரியம்

காரியமாக உள்ள பொருள்கள் காரணத்திலிருந்து வேறுபடாதவை என்ற உண்மையை சைவ சித்தாந்தம் ஏற்கிறது. ஆனால் காரியமானது காரணத்தில் உள்ளதாம் தன்மையைக் கொண்டிருப்பதை விளக்குவதன் மூலமே காரண காரிய ஒழுங்கு தெளிவுபடும் என்பதைச் சைவ சித்தாந்தம் விளக்குகிறது.

தோற்றமானது ஒன்று ஒன்றின் தோன்றுவதாக அமைவது. உள்ளதாக இருக்கின்ற அது பின் இல்லாமல் போகிறது. இது பொருள்களின் நடைமுறை. மரத்திலிருந்து விதையும் விதையிலிருந்து மரமும் இம்மரத்திலிருந்து விதையும் என ஒன்று ஒன்றில் தோன்றி உளதாகின்றது. கணிமண்ணும் ஒன்றின் காரியம் தான். களிமண்ணின் காரியம் தான் குடம். இப்படித் தொடரும் காரியத் தொடர்ச்சி தான் 'ஒன்று ஒன்றின் தோன்றி உள்ளதான நிலை' என்கிறார் மெய்கண்டார். உளதானது ஒன்றாக இருக்க, இலதானது எப்படிப் போகிறது என்றால் பெற்றிமையின் உண்டு என்பது முடிவு. அது பெற்றுக் கொள்ளுவதாக இருக்கின்ற தன்மை என்பதாகும். அதில் பொருள் அருவமூலம் உண்டு என்கிறார் மெய்கண்டார்.

**"பூதாதி ஈறுமுதலுந் துணையாகப்**

**பேதமாய் திதியாறும் பெற்றிமையின் - ஓதாரோ**

**ஒற்றொன்றில் தோன்றி உளதால் இறக்கண்டு**

**அன்றென்றும் உண்டென்ன ஆய்ந்து"4**

பிரபஞ்சத்தில் நிலம் தொடங்கியுள்ள எல்லாமே அழிவுடனும் தொடக்கத்துடனும் தொடர்பு கொண்டனவாகவே இருப்பதாக உள்ளன. இவ்வகையில் காரியத்துக்கான தொடக்க நிலையான ஒடுக்கும் நிலைதான் தலைமையுடையது. அதை எந்தக் காரியமும் நிகழ்த்திக் கொள்ளாது. ஒன்று காரியமாகி அது ஒன்றின் காரணமாகிவிடும் காரணத் தொடர்ச்சி காட்சிப்பொருள் உண்மையானது. ஆனால் காரியநிலையின் இல்லாத தன்மையான பொருளில் அருவத்தன்மை ஆராய்ச்சி இணையும்போது 'தொடக்கம் அல்லது தோற்றம்' என்பது காரியத்தைக் காரணத்தின் உள்ளதான நிலையிலிருந்து தொடங்குவது என்பதாகும். எனவே 'காரணம்' என்ற சொல்லில் எல்லாக் காரியத்தையும் இணைத்த உண்மையில் சொல்ல

வேண்டுமானால் அதைச் 'சங்கார காரணம்' என்று கூற வேண்டும் என்பது சைவ சித்தாந்தம். காரிய முழுமையைக் காரண நிலையில் ஒடுக்கிவைத்த நிலை ஆகும். அதைச் சுட்டியறியப்படுவதான அறிவற்ற சடப்பொருளும் செய்யாது. சடப்பொருளைச் சார்ந்து அறிவதான ஆன்மாவும் செய்யாது. எனவே சங்கார காரணம் என்ற செயலைச் செய்வது 'சங்கார காரணன்' எனப்படும் பொருள். அது நிமித்த காரணமாக இருந்து அதனைச் செய்கிறது என்பது சைவ சித்தாந்தம்.

## புறக்காட்சிப்பொருள் உண்மை

சிவஞான போதத்தில் தொடங்கப்படும் முதல் ஆராய்ச்சியானது உலகைப் பார்ப்பதும் அதுபற்றி முடிவெடுப்பதுமான ஆராய்ச்சி. அதுவே புறக்காட்சி உண்மை பற்றிய ஆய்வாகச் சைவ சித்தாந்தம் அமைக்கிறது.

"ஈண்டு உளதாய் ஒருவனோடொருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசமுடைத்து என்றது"5 இம்மேற்கோள் பிரபஞ்சம் பற்றிய முடிவைத் தருவது. இதில் உலகத்தைப் பற்றிய ஆய்வில் முதல் முடிவாக அமைவது 'உலகம் சுட்டப்படுவது' என்பதாகும்.

சுட்டி அறியப்படுவதாக இருப்பது உலகம். உலகத்தை அறிவதென்பது 'இன்னது' என்று சொல்லுவதாகும். 'இன்னது' என்று சொல்லுவதற்கு அறிவு வழிகளில் காட்சி, கருதல், நூல் ஆகிய மூன்று வழிகளைச் சைவம் ஏற்றுக் கொள்கிறது. 'இது' என்று சுட்டப்படும் உண்மைக்குரிய உலகமானது சுட்டப்படும் தன்மையில் மூவகைப்படுகிறது. 'அவன் அவள் அது எனும் அவைமூ வினைமையிலாக எடுத்துக் காட்டினார் மெய்கண்டார்.

அவன், அவள், அது என்று உலகப் பொருள்களை மூவகைத் தொகுதியாகச் சுட்டியது 'அவயவப் பகுப்பு' முறை. அவயம் என்பது உறுப்பு. அவயவம் என்பது உறுப்புக்களுடனான உறுப்பு அல்லது உறுப்பிணைப்புக்களின் உறுப்பிணைப்பு என்ற பொருளுடையது.

"ஈண்டு அவயவமென்றது, ஆடையின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படும் நூல்கள் போல ஒரு பொருளின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படும் தகுதியுடையவற்றை நிலம், மலை, கடல் முதலியவற்றின் ஏகதேசமாகிய மண், சிலை, நீர் முதலியன தொடுதல், போழ்தல், முகத்தல் முதலிய தொழில்களானே தனித்தனி பிரித்தறிதற்குரியவாமாறு காண்க"6

என்பது 'அவயவம்' குறித்த சிவஞானமுனிவரின் விளக்கம். அவயவமாக உள்ள தன்மையே பொருள் சுட்டி அறியப்படும் முறை என்பர். அவன் எனப்பட்ட தொகுதி. வேறுபட்ட அவள் எனப்பட்டதான தொகுதி. இந்த இரண்டிலும் வேறுபட்ட அஃறிணைத் தன்மைத் தொகுதி என உலகத்தைச் சுட்டிச் சொல்கிறார். அடுத்து உறுப்புக்களின் இணைப்பாக உள்ளதான அப்பொருள்களை ஆராய்ந்தால் அவை அறிவில்லாத பொருள்களாகவும் ஒன்றாகவே இல்லாமல் பல பொருள்களாகவும் உள்ளன என்ற முடிவு கிட்டுகிறது. இப்படி 'உறுப்பிணைப்பாகவும், அறிவில்லாமல் பலவாகவும் சுட்டியறியப்படும்' உண்மைதான் காட்சிப்படும் பொருள்களின் உண்மையாகும். இதுதான் சுட்டியறியப்படுவதன் உண்மை என்பது.

சுட்டியறியப்பட்ட உலகத்தின் நடைமுறையில் உண்டாதல், இருத்தல், இல்லாமற் போதல் எனும் மூன்று நிலைகள் உள்ளதை எடுத்துக்கொண்டு உலகத்தில் சுட்டியறியப்படுகின்ற அனைத்துப் பொருள்களுக்குமான உண்மைத் தன்மையை நிறுவுகிறது. தோன்றி நின்று இல்லாமற் போவது என்ற நடைமுறையில் இரண்டு வழிமுறைகள் பெறப்படுகின்றன. அவை 'உள்ளது' என்பதற்கான விளக்கத்திற்குரியவை. முதலில் 'உள்ளது' என்று சொல்லப்பட்ட 'சுட்டு உண்மை' தோற்றத்தையும் இறுதியையும் இணைத்துக் கொண்ட ஒன்று. இதனை,

"தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்"7

என்று மெய்கண்டார் கூறும் 'ஏது' தெளிவாக்குகிறது. அடுத்து சுட்டியறியப்படுவதன் உருவ மாற்றத் தன்மையை ஆராய்வதில் அருவத் தன்மை நிறுவப்படுதல் இரண்டாவது வழிமுறையாகும். இதனை,'பெற்றிமையின் அன்றென்றும் உண்டென்ன ஆய்ந்து'8 என்ற சிவஞானபோத முதல் வெண்பாவிலேயே வெளிப்படுத்தியுள்ளார் மெய்கண்டார்.

பொருளின் புறக்காட்சி உண்மை காட்சியைக் கடந்த அருவத்தன்மை உறுதியில் நிறுவப்பட்ட வகையில் உருவப் பொருளின் உள்ளிலிருந்து இயக்குவதான அறிவுத்தன்மை உடைய அருவ ஏற்புக்கான வழியும் கிட்டுகிறது. இவ்வகையில் காட்சிப்பொருள் உண்மை பற்றிய ஆராய்ச்சி 'அறிவில்லாத, அறிவுள்ளதான பொருள்களை' முடிவு செய்ய உதவுவதை அவன், அவள், அது என மெய்கண்டார் வகுத்த உலகக் காட்சித் தொகுப்பால் அறியலாம். இதனை "ஒருவனோடு ஒருத்தி ஒன்று உன்று உரைத்திடும் உலகம் எல்லாம்" எனச் சிவஞான சித்தியார் வழிமொழிந்துள்ளது. அதாவது உலகமானது தோன்றி நின்று ஒடுங்குதல் தன்மையுடையதாக விளங்குகிறது. இவ்வாறு உலகத்தைத் தோற்றுவித்து,

நிலைபெற வைத்து, ஒடுக்குவதற்குத் தனக்கு ஒரு முதல்வனின்றித் தானே காரணனாய் ஒரு கருத்தா வேண்டப்படுவதாகின்றது. அவ்வாறான ஒரு கருத்தாவின் (அருவ நிலை) இருப்பை உலகத்தில் தோன்றி நின்று ஒடுங்கும் தரத்தினின்று அனுமானிக்கக் கூடியதாகின்றது. அவ்வாறே இதன் உரையை,

"அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் கூறப்படும் சேதனா சேதனப் பிரபஞ்சம் எல்லாம்"9 என விளக்கினார் திருவிளங்கம்.

## சத்காரிய வாத அடிப்படையில் பரம்பொருள் உண்மை நிறுவல்

இறைவன், உயிர், உலகு எனும் முப்பொருளை ஏற்கும் சைவசித்தாந்தம் இறைவனே இவ்வுலகின் இயக்கத்திற்கும் அசைவிற்கும் அடிப்படைக் காரணனென உரைக்கும் அதேவேளை இறைவனுக்கும் உலகுக்கும் இடையில் முரண்பாட்டு நிலையான தன்மை விளங்குகிறது. இறைவன் பூரணமானதும், மாறாததும், அழியாததும், தூயதும், எல்லையற்றதும், என்றுமுள்ளது எனப் பலவாறாகக் கூறப்படுகின்றது. இதற்கு மாறாக உலகானது சட்டத் தன்மையானதும் மாற்றத்திற்கு உரியதும், பந்தத்திற்குரியதும், அழிவிற்குரியதும், எல்லையுடையதும், பகுப்பிற்குரியதும் என எடுத்தாளப்படுகிறது. இவ்வாறு முரண்பட்ட இயல்பு கொண்ட உலகை இறைவன் தோற்றி ஒடுக்குதல் பொருத்தமுடையதோ எனும் ஆசங்கை எழுகிறது. மேலும் இறைவன் சித்துப்பொருள், மாற்றமுறாதது, அழியாதது, பகுப்பிற்கு அப்பாற்பட்டது எனப் பலவாறாக அறிகின்றோம். மேலும் சச்சிதானந்தம் எனவும் வர்ணிக்கப்படுகிறது. அவ்வாறன்றி உலகம் சடப்பொருள், அசத்துப் பொருள் என எடுத்தாளப்படும். எனவே சித்திலிருந்து சடம் தோன்றுகிறது என்பது தர்க்க ரீதியில் பொருத்தமற்றதாகின்றது. அதேவேளை இறைவனை விடுத்து சடம் தன்னில் உருவாகுவதென்பதோ அல்லது வேறுவகையில் தோன்றுவதென்பதோ சிக்கலுக்குரியதால் அதுவும் சாத்தியமில்லை. இந்நிலையில் 'மாயை' காரணமாக, காரியமாகிய பிரபஞ்சம் தோன்றி, மறைதல் இடம்பெறும் என விளக்குவர்.10 இதனை அருணந்தி சிவாச்சாரியார்

"தோற்றமும் நிலையும் ஈறும்

மாயையின் தொழில் தென்றோ

சாற்றிடும் உலகம்"11 எனவும்,

"விமலுக்கோர் சக்தியாய்ன் புவனபோகத்

தனுகரணமும் உயிர்க்காய் வைத்தோர்

மலமாய் மாயை”12 எனவும் கூறி விளக்குகிறார்.

மாயை உலகிற்குக் காரணமாய் அமைகின்றது. இக்காரணத்தைச் சித்தாந்தம் முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என மூன்றாய் விளக்கி நிற்கிறது. அவற்றுள் மாயை முதற்காரணம், சிவசக்தி துணைக்காரணம், சிவன் நிமித்தகாரணமாகும். இதனைச் சிவஞான சித்தியார் வழிமொழிந்தவராக,

“காரிய காரணங்கள் முதறுணை நிமித்தங் கண்டாம்” எனும் பாடலினூடாக விளக்குகிறார். இங்கு குடத்தைக் குயவன் மண்ணைக் கொண்டும், திரிகை முதலானவற்றைத் துணையாகக் கொண்டும் வனைவது போல உலகத்தைச் சிவன் மாயையைக் கொண்டும், தனது சக்தியைத் திரிகை போலத் துணைக் கொண்டும் தோற்றுவிப்பான் என்பதை எடுத்தாள்கிறார். இந்நிலையில் சடமான மாயைவழிச் சடத்தன்மை கொண்ட உலகு தோன்றுவது முரண்பாடற்றதாகின்றது. இறைவன் சடக்காரணன் அல்லன். இறைவன் தான் நிமித்த காரணன் ஆகின்றான். மாயையானது தன்னில் உலகைப் படைப்பதாகாது. கடவுளின் ஆணைப்படியே செயலாற்றுகிறது. பானையைக் கொண்டு அதனைப் படைத்த குயவன் ஒருவன் உளன் என அறிவது போல உலகு வழி பரம்பொருள் உண்மை ஆதாரப்படுத்தப்படுகிறது.

நேரடி பிரத்தியட்சத்திற்கு உள்ளாகும் உண்மைத் தன்மையைச் சித்தாந்திகள் ஏற்பர். உலகு அசித்தாய் சடமாய் அமைகின்றது. சடத்தினைச் சட சம்பந்த மாயை முதற் காரணனாய் அமையத் தோன்றுகிறது. சடமானது சிந்தித்துச் செயலாற்றும் தன்மையற்றது. சிவன் நிமித்த காரணனாய்ச் சக்தியின் துணையோடு பிரபஞ்சத் தோற்ற ஒடுக்க நிலைபேற்றிற்குக் காரணமாகின்றது. மேலும்

“காரியப் பிரபஞ்சம், தனு கரண புவன போகங்கள் - ‘அவை சடம்’ என்பது தெளிவாகலின், அவற்றுள் யாதொன்றையும்,‘உலகிற்கு நிமித்த காரணம்’ எனக்கூற வழியில்லை.

சேதனப் பிரபஞ்சம், உயிர்கள். அவை அறிவுடையனவாயினும் மலத்தாற் கட்டுண்ட அறிவின்றி நிற்றலும், சுட்டுணர்வு உடைய ஆதலும் உடைமையின் அவையும் உலகிற்கு நிமித்த காரணம் ஆமாறில்லை.

ஆகவே,‘உலகிற்கு நிமித்த காரணன் ஆவான் மேற்கூறிய இருவகைப் பிரபஞ்சங்களினும் வேறானவன்’ என்பது பெறப்பட்டது.

இனி, உலகத்தின் விரிவையும், வியத்தகு அமைப்புக்களையும் நோக்கினால்,'இதனைச் செய்தவன் அளவிலா அறிவும், அளவிலா ஆற்றலும், உயிர்கள் மாட்டு அளவிலா அருளும் உடையவன்' என்பது துணியப்படும். படவே, அத்தன்மை உடையானை,ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒருவன்"13 என விளக்குகிறது.

பிரபஞ்ச பொருண்மைக்கு உரிய நுண்மையான மூலப்பொருண்மையை தோற்றத்திற்கு உரிய அடிப்படைப் பொருளாக ஏற்க வேண்டும். மரத்திலிருந்து விதை ஒரு காரியம். ஆனால், அதில் இன்னொரு மரத்திற்கான மூலம் இருக்கிறது. அது அந்த மரத்தின் ஒடுங்கிய தன்மை. இந்த ஒடுங்கிய தன்மை மரத்தால் அமைந்தது. ஆனால் மரமே செய்கிறது என்று சொல்லமுடியாது. வேறு மரத்தின் விதையை அது ஒடுக்காது. அதன் இயல்பில் அதற்கான உண்மை உண்டு. இது போன்ற ஒடுக்க நிலைதான் தோற்ற முறைக்கு அடிப்படையானது. இவ்வகையில் தோற்றமுறைக்கு உரிய 'ஒடுக்க நிலை' என்பது தலைமை உடையதாகிறது. அதேபோல அழியும் மரத்தின் 'ஒடுக்க முறை' ஒன்று உண்டு. அது 'ஒடுக்க நிலை ஒழுங்கின் இன்றியமையாமையை' வலியுறுத்துவது. 'விதை' என்ற ஒடுக்கத்திலிருந்து மரம் விளையும் என்ற ஒழுங்கு தோற்றப்பாட்டில் தெளிவாகியிருக்கிறது. அதற்கான 'ஒடுக்கம்' நியதித் தெளிவைத் தருகிறது. இத்தெளிவிற்குக் காரணம் தோற்ற உறுதிப்பாடு. ஆனால் 'மரஅழிவு' எனும் ஒடுக்கமானது மரத்தாலானது. இது எப்படி இன்னொரு மரத்திற்கு மூலமாகும் என்பதில் தெளிவில்லை. இந்த தெளிவின்மைதான் ஒடுக்கும் தன்மையின் இன்றியமையாமையை வலியுறுத்துவதோடு ஒடுக்குபவன் வேண்டும் என்பதை வலியுறுத்தி அதுதான் தலையான செயல் என்று விளக்குவதாகிறது. இத்தன்மை வரலாற்றில், உலகப் பொருள்களுக்கு மூலமான பொருளைச் சைவ சித்தாந்த விளக்கம் செய்தோர் விளக்கிய முறையில் பின்வருமாறு காணலாம்.

"பரு நிலையில் காரியமாய் நிற்கின்ற உலகம் ஒரு வகையாய் இல்லாது, பல்வேறு வகையாய் காணப்படுதலின், அவை அனைத்தும் ஒடுங்கி நுட்ப நிலையில் காரணமாய் நிற்கும் நிலையிலும் ஒருவகையாய் இராது, பல்வேறு வகையாகவே இருக்கும் என்பது உணரப்படுகிறது. பொருள்கள் பரு நிலையில் காரியமாய் உள்ள பொழுது பொருளாகவே இருத்தல் வெளிப்படை. ஆயினும் அவை நுண்ணிலையில், காரணமாய் நிற்கும் பொழுது, பொருள்களை இராது சத்திகளாய் இருக்கும். எனவே, உலகத்தின் காரண நிலை பல்வேறு வகையான சத்திகளின் தொகுதியேயாகும். அதுவே, மாயை எனப்படுவது என்கிறது சைவ

சித்தாந்தம். அத்தகைய மாயை என்பது ஒன்று உண்டு என்பதும் 'இலயித்தது ஆம்' என்றதில் குறிப்பால் உணர்த்தப்பட்டதாம்.

எப்பொழுதும் ஒரு நிலையிலே நில்லாது, சூக்கும நிலையை அடைதலும் பின்பு அந்நிலையினின்றும் நீங்கித் தூல நிலையை அடைதலும் ஆகிய நிலை வேறுபாட்டினை உடைய பொருள்கள் சூக்குமமாகிய சத்தி வடிவாய் உள்ள பொழுதே 'காரணம்' என்னும் நிலையையும்,தூலமாகிய பொருள் வடிவாய் உள்ள பொழுதே 'காரியம்' என்னும் நிலையையும் உடையனவாம் என்பது அறியத்தக்கது."14

இது சிவஞான முனிவர் விளக்கத்தின் உரை. நுண்மையான பகுதிகளற்ற ஆற்றல் வடிவமான மூலப்பொருளிலிருந்து களிமண்ணிலிருந்து குடத்தை நேரே உண்டாக்குவது போல உண்டாகவில்லை. முன்னதாக காரியங்கள் சூக்குமமாக ஒடுக்கப்பட்டிருந்து அதன் மூலம் காரியங்கள் 'ஒன்று ஒன்றின் தோன்றி உளதாய் அழிகின்றன' என்று கூறும்.

காரியங்கள் தொடர்ந்து புதிதாகவோ (அசத்காரியம்) சார்புள்ள விளைவுகளாகவோ (பிரதீத்ய சமுத்பாதம்) தோன்றும் என்ற விளக்கங்களை எல்லாம் மறுக்கின்ற வகையில் தொடக்கமாக 'உள்ளதே தோன்றும் இல்லது வாராது' எனும் சத்காரிய வாதத்தில் நின்று மறுக்கிறது. பின்னர் நிமித்த காரணமான இறை உண்மையில் விரிவாகப் பேசுகிறது.

## பிரபஞ்சத் தோற்றத்திற்கு முதற்காரணம் மாயை

சுட்டியறியப்படுகின்ற உலகமானது அறிவு இல்லாதது. அறிவு இல்லாத இந்த உலகத்திற்கு மூலப்பொருளும் அறிவு இல்லாததே. உள்ளதே தோன்றும், இல்லது வாராது என்னும் விளக்கத்தால் சுட்டியறியப்பட்ட உலகத்திற்கு அறிவு என்ற குணம் 'தன்னை நோக்கிய உண்மையில்' என்றும் இல்லை என்பது சைவ சித்தாந்தத்தின் துணிபு. எனவே, சுட்டப்பட்ட உலகத்தின் உண்மை சுட்டியறியப்படாத முதற்பொருளுண்மையில் நிறைவு பெறுகிறது என்பதைச் சைவ சித்தாந்தம் விளக்குகிறது.

"காரண காரியங்கட்கு இடையே தன்மை வேற்றுமை காணப்படுவதில்லை. இரண்டும் ஒரு தன்மையாய் இருத்தலே இயல்பு. இதனை 'மண் - குடம்'இ'பொன் - ஆபரணம்' என்பவற்றில் வைத்துக் காணலாம். 'பிரமம் - சித்து', உலகம் - சடம்

சடத்திற்குச் சடமே முதற்காரணமாய் இருத்தல் வேண்டுமன்றிச் சித்து முதற்காரணமாய் இருத்தல் இயலாது'.

'நெல் விதைக்க அதினின்றும் புதரும் வைக்கோலும் விளைகின்றன. மரத்தில் புல்லுருவி தோன்றுகிறது. சாணத்திலிருந்து தேள் பிறக்கிறது. சிலந்தியினிடத்தில் இருந்து நூல் தோன்றுகிறது. இவை போன்றவற்றில் காரணத்தின் தன்மைக்கு மாறான தன்மை காரியங்களில் காணப்படுகின்றன. எனவே, காரணத்தின் தன்மையே காரியத்திற்கும் உள்ளதாகும்' என்பது கட்டளையன்று எனத் தடை விதிக்கலாம். இங்கு எடுத்துக் காட்டிய இந்த எடுத்துக் காட்டுக்களிலும் காரியத்தில் காணப்படும் தன்மைகள் காரணத்தின் தன்மைக்கு நேர்மாறானவை அல்ல. காரணத்தின் தன்மையோடு ஒருபுடை ஒத்த தன்மைகளே. சடம், சித்து என்பன அவ்வாறன்றி ஒன்றிற்கொன்று நேர்மாறானவை. ஆகவே, சடமாகிய உலகத்திற்குச் சித்தாகிய பிரமம் முதற்காரணம் ஆகாது".15

என முதற்காரண உண்மை அறிவுப்பொருளுக்கு அயலாக விளக்கப்படுகிறது. சிலந்தியின் வாயில் வரும் உமிழ்நீர் போன்ற உதாரணங்கள் சடகாரியங்களே. சிலந்தி உடம்பு ஒரு சடப்பொருள். இது போன்றவற்றில் காரியமாக விளைவனவற்றின் காரணத்தைத் தெளிவாக அறிந்து துணைக்காரியங்களைத் தெளிவாகப் பட்டியலிட வேண்டும். காரியத்துக்கான பல்வேறு காரணங்களை விளங்கிக் கொள்ளாமையும், காரியத்துடன் நிகழும் பல்வேறு காரியங்களை வேறு பிரித்தறியாமையும், காரியமே காரணமாக நின்று தோற்றுவிக்கும் பல்வேறு காரணங்களை அறியாமையும் காரண காரிய நேர்த்தொடர்பை உண்மையாக உணர முடியாமைக்குக் காரணங்களாகின்றன.

அறிவில்லாத பொருளாகிய உலக காரியத்திற்கு மூலமான முதற்காரணப்பொருள் மாயை ஆகும். 'மா' என்பது ஒடுக்குதல்,'யா' என்பது வருதல் எனப்பகுத்து,'உலகம் ஒடுங்குவதற்கும் திரும்புவதற்கும் இடமாய் உள்ளது' என்று பொருள் கொள்ளப்படுகிறது.16

மூன்று காலத்திலும் இருந்து கொண்டிருப்பதாய் தோற்றம், நிலை, இறுதி எனும் மூவகை மாற்றங்களுக்கு உரியதாய் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்ற பிரபஞ்சம் உண்மையுடையது. அதனுடைய பகுதியில் இல்லாதபோதும் இன்னொரு தோற்றத்திற்கான ஒடுக்கமாக – அருவமாக இருந்துவருகிறது. இப்படி எல்லாப் பொருளுக்குமான அருவமாக உள்ள ஒரு உண்மைப்பொருள் மாயை என்பது.

மாயையானது அணுக்களாக இருக்கும் ஒன்றல்ல. பல அணுக்கள் சேர்ந்தது. பலவாம் தன்மை உலகக் காட்சி உண்மையில் பலவாக இருக்கின்ற சடத்தன்மைப்பொருள் அழியும் என்ற பொருள் பெறப்பட்டது. பகுதிகளாக இல்லாமல் பலவாக இல்லாமல் ஒரு பொருளாகவுள்ள நிலையான உண்மைப்பொருள் மாயை. மாற்றம் என்ற பொருளில் உணரப்பட வேண்டியதான அழிவு என்ற தன்மையை உலக காரியத்தில் கொண்டிருப்பதால் மாயையை மாறும் உள்பொருள் என்பர். அசத்து எனப்படும் எந்தப் பொருளையும் இல்லாத பொருள் என்று விளக்காமல் உண்மைப் பொருளாகவே விளக்கி அதை மாறுகின்ற உள்பொருள் என்று விளக்குவது சைவ சித்தாந்த மரபு.

மாயையானது இன்ப துன்ப காரியங்கள் அடிப்படையில் சுத்த மாயை, அசுத்த மாயை என இருபடித் தன்மைகளில் விளக்குவர். மாயை என்பது பரிக்கிரக சக்தியாக பரம்பொருளுடன் சம்பந்தப்படுத்தப்படும். 'ஒருவனுக்கு அவனின் வேறாய் உள்ள சக்தி பரிக்கிரக சக்தியாகும்'. இதை இறைவன் பிரபஞ்ச உற்பத்திக்கு நேர்த்தொடர்பு கொண்டு செயற்படுத்தும் வகையில் சுத்த மாயையாகிறது. உயிர்கள் சம்பந்தமான உலக காரியமாக உண்டாதல் ஏவல்படுத்திக் காரியப்படுத்தும் முறையில் விளக்கப்படுகிறது. ஒரே மாயையிலிருந்து பரம்பொருள் ஆற்றல் நேர்த்தொடர்பிலும் ஏவல் தொடர்பிலும் பிரபஞ்ச காரியத்தைச் செய்தல் என்பது மாயையின் செயலுரிமையை 'பயன்' வகையில் ஆற்றவைப்பதாகும்.

சைவ சித்தாந்தம் பிரபஞ்ச தோற்றப்பாட்டை இரண்டு வகைகளில் விளக்குகிறது. விருத்தி, பரிணாமம் என்பனவே அவையாகும். மாயை எனும் முதற்காரணப் பொருளிலிருந்து பகுதிப்படாமல் பொருள்கள் தோற்றுவிக்கப்படும் முறை 'விருத்தி' எனப்படும். இவ்வகையினை பின்வரும் விளக்கவுரைப்பகுதி விளக்குகிறது.

"விருத்தியாவது, சுருங்கி நிற்பது விரிவடைதல். படம் குடில் ஆதல் முதலியன இதற்கு எடுத்துக்காட்டு ஆகும். (படம் - துணி, குடில் - கூடாரம்) இதற்கு வேற்றுமைப்பொருளின் சேர்க்கை இன்மையால், சுத்த மாயையின் காரியம் எல்லாம் விருத்தியே ஆகும்.

'சிவப்பிரகாசம் முதலியவற்றில் சிவ தத்துவத்தில் சக்தி தத்துவமும், சக்தி தத்துவத்தில் சதாசிவ தத்துவமும், சதாசிவ தத்துவத்தில் ஈசுர தத்துவமும்,ஈசுர தத்துவத்தில் சுத்த வித்தையும் தோன்றும் என்றது அவ்விருத்தி ரூபமாய் நின்ற சுத்த மாயையில் தோன்றும் என்னும் கருத்தாகலின், முரணாமை அறிக'.

(எனவே, சுத்த மாயையின் முதல் விருத்தி ஒரு பகுதியில் சிவ தத்துவமாய் நின்று, மற்றொரு பகுதி இரண்டாம் விருத்தியாகி, சக்தி தத்துவம் என நிற்கும். ஏனைய மூன்று தத்துவங்களும் இவ்வாறேயாம் என்பது விளங்கும்."17

அடுத்து, பரிமாண முறையில் பொருள் உற்பத்தி ஆவது பின்வருமாறு விளக்கப்படுகிறது.

"பரிணாமமாவது ஒரு பொருள் மற்றொரு பொருளாக மாற்றம் எய்துதல். இது பூரண பரிணாமமும், ஏகதேச பரிணாமமும் என இருவகைப்படும். பால் தயிராதல் போல்வன பூரண பரிணாமம். வெண்ணெய் புழுவாதல், சாணம் தேளாதல் முதலியன ஏகதேச பரிணாமம். பரிணாமம் எல்லாம் வேற்றுப் பொருளின் சேர்க்கையால் ஆவன. ஆதலால், 'பரிணாமம் சுத்த மாயைக்கு ஆகாது. பல கன்மங்களோடு விரவிய அசுத்த மாயைக்கே ஆகும்' என்பதும்,'அதுவும் ஏகதேச பரிணாமமே' என்பதும் சைவ சித்தாந்தம்".18

முதற்காரணப்பொருளாகிய மாயை உலகின் தோற்ற ஒடுக்கத்திற்குரிய நிலைக்களனாக எடுத்தாளப்படுகிறது. இக்கருத்தினை மெய்கண்டதேவர்,

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்

தோற்றிய திதியே யொடுங்கி மலத் துளதாம்

அந்தம் ஆதி என்மனார் புலவர்"19

(சிவஞானபோதம், முதலாம் சூத்திரம்)

இவ்வாறாக சுட்டும் வகையில், மாயையில் ஒடுங்கித் தோன்றிய உலகம், மாயைக் காதாரமாக விளங்கும் முதல்வன், சக்தியில் ஒடுங்கித் தோன்றும். இக்கருத்தை வலியுறுத்தும் விதமாக அருணந்தி சிவாச்சாரியாரின் வாக்கு பின்வருமாறு அமைகிறது.

"தோற்றமும் நிலையும் ஈறும்

மாயையின் தொழில தென்றே

சாற்றிடும் உலகம்"20(சிவஞானசித்தியார் சுபக்கம். பா.34)

மாயை தான் முதற்காரணப்பொருள் என்பதை சித்தியார் பாடல் வழி நன்குணர்ந்து கொள்ளலாம்.

"காரிய காரணங்கள் முதல் துணை நிமித்தம் கண்டாம்

பாரின் மண் திரிகை பண்ணும் அவன் முதல் துணை நிமித்தம்

தேரின் மண் மாயையாகத் திரகை தன் சக்தியாக

ஆரியன் குலால னாய் நின் றாக்குவன் அகிலம் எல்லாம்"21

(சிவஞானசித்தியார் சுபக்கம். பா.38)

எனும் பாடல் வழி முதல்வன், மாயையை முதற்காரணமாகவும், தனது சித் சக்தியை துணைக் காரணமாகவும் கொண்டு உலகினை உற்பத்தி செய்கிறான் என்பது தெளிவு. முதல்வன்தான் நிமித்த காரணனாகின்றான். மாயை தன்னில் உலகைப் படைப்பதாகாது. கடவுளின் ஆணைப்படியே செயலாற்றுகிறது. இவ்வகையிற் கடவுள் சக்தியாகத் திகழ்கிறது. பானையைக் கொண்டு, அதனைப் படைத்த குயவன் ஒருவன் உளன் என அறிவதுபோல உலகுவழி முதல்வனின் இருப்பு ஆதாரப்படுத்தப்படுகிறது. எனினும், முதல்வன் முப்பொருளில் மேலானதுடன், சித்துத் தன்மை கொண்டது. உலகு சடத்தன்மை கொண்டது. எனவே, சித்து நேரடியாகச் சடத்தைத் தோற்றுவித்தல் பொருத்தமற்றதாகும். இந்நிலையில் முதல்வனின் சக்தியான மாயை வழி உலகு படைக்கப்படுவதாகின்றது. இதனாலேயே சித்தாந்தம், மாயையே உலகின் தோற்ற ஒடுக்கத்திற்குக் காரணம் எனவும் வரையறுத்து நிற்கிறது. குயவன் பானையைத் தோற்றும் போது குயவன் நிமித்த காரணமாகவும், திரிகை துணைக்காரணமாகவும், மண் முதற்காரணமாகவும் அமைகின்றன. இறைவன் உலகினைப் படைக்கும் போது மாயையை முதற்காரணமாகவும், சிவசக்தி துணைக்காரணமாகவும், முதல்வன் நிமித்த காரணமாகவும் அமைகின்றன.

இந்த மாயை ஏன்? என்ற வினாவிற்கு உலகிற்கு ஒரு நிலைக்களமாவதற்கு என விடையளிக்கப்படுகிறது. இதற்கான விளக்கமானது சிவப்பிரகாசப் பாடலால் தரப்பட்டுள்ளது.

"என்னையிது எனின் உலகுக்கு குபாதான மில்லை

இறைவனல தெனின் அசித்துச் சித்தினிடத் துதியா

மன்னியுளதேல் முதல்வன் என் கொள் என்னின்

மாயைதான் அசித்துருவாய் மருவ மாட்டா(து)

அன்னவனும் இது மொழிய ஆக்கமாட்டான்

அசத்தனாம் எனின் அதுவும் அவன்போல் நித்தம்

முன்னவன் அவ் வசித்தைவிரித்து தெவையும் ஆக்கும்

முதன்மை அது கொடுத்ததென மொழித்திடாரே"22

(சிவப்பிரகாசம் பா.23)

மாயை இல்லாது உலகு தோன்றுவதற்கு வேறு காரணமும் இல்லை. மேலும், சித்து, சடவேறுபாட்டால் முதல்வனே உலகிற்கு நேரடிக் காரணனாக அமைதலும் சாத்தியமில்லை. இந்நிலையில் மாயையே நிலைக்களம். எனினும் அது அறிவற்றதும், தானே பொருட்களாய் வளர மாட்டாததாலும் இறைவன் தனது விருப்பத்திற்கமைய வேண்டிய உருவங்களை மாயையினின்றும் உருவாக்குவான் என்பதாகும்.

## நிறைவுரை

'உள்ளதே தோன்றும் இல்லது வாராது' எனும் அடிப்படையைச் சத்காரியவாதம் எடுத்தாள்கிறது. இவ்வகையில் உலகப் படைப்பு என்பது புதிதாக ஒன்றைப் படைப்பது என்பதல்ல. படைத்தல், அழித்தல் என்பது சங்கற்ப மாத்திரையில் நிமித்த காரணனான இறைவன் அவ்வியக்க நிலையிலிருந்ததைத் தோற்றிப் பின் ஒடுக்குவான் என விளக்கமுறுவதாகின்றது. இறைவன் உலகினைப் படைக்கும் போது மாயையை முதற்காரணமாகவும், சிவசக்தி துணைக்காரணமாகவும், முதல்வன் நிமித்த காரணமாகவும் அமைகின்றன. பானையைக் கொண்டு, அதனைப் படைத்த குயவன் ஒருவன் உளன் என அறிவதுபோல உலகுவழி முதல்வனின் இருப்பு ஆதாரப்படுத்தப்படுகிறது. இவ்வகையில் சத்காரியவாதமானது சைவசித்தாந்தத்தில் எடுத்தாளப்படுகிறது.

## அடிக்குறிப்புகள்

1. சிவஞானயோகிகள், (1952), சிவஞான பாடியம், கழக வெளியீடு, சென்னை, ப.
2. அருணைவடிவேலு முதலியார், சி., (1991), சிவஞானபோத மாபாடியப் பொருள்நிலை விளக்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ப.278.
3. மேலது, ப.238.
4. சிவஞானயோகிகள், (1952), சிவஞான பாடியம், கழக வெளியீடு, சென்னை, ப.
5. மேலது, ப.68.
6. மேலது, ப.68.

7. மேலது, ப.71.
8. மேலது, ப.71.
9. திருவிளங்கம், மு., (1971), சிவஞான சித்தியார் சுபக்கம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், இலங்கை, ப.57.
10. ஞானகுமாரன், நா., (2012), சைவ சித்தாந்தத் தெளிவு, தூண்டி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், ப.37.
11. சிவஞானசித்தியார், பாடல் 34
12. மேலது, பாடல் 143
13. அருணைவடிவேலு முதலியார், சி., (1991), சிவஞானபோத மாபாடியப் பொருள்நிலை விளக்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ப.275.
14. மேலது, ப.241.
15. மேலது, ப.340.
16. மேலது, ப.339.
17. மேலது, பக். 364, 365.
18. மேலது, ப.364.
19. ஆனந்தராசன், ஆ., (2010), சிவஞானபோதம் வழித்துணை விளக்கம், நர்மதா பதிப்பகம், சென்னை, ப. 22.
20. திருவிளங்கம், மு., (1971), சிவஞான சித்தியார் சுபக்கம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், இலங்கை, ப. 76.
21. திருவிளங்கம், மு., (1971), சிவஞான சித்தியார் சுபக்கம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், இலங்கை, ப. 82.
22. குருசாமி, வே., (பதி), (1981), சிவப்பிரகாசம் மூலமும், ஞானப்பிரகாச தேசிய பரமாசாரிய சுவாமிகள் உரையும், அருள்நூல் பதிப்புக்குழு, சேலம், ப. 52